# வஞ்சிக்காண்டத்தில் இசைக் கருவிகள்

**பேரா. சே. செந்தமிழ்ப்பாவை**
இயக்குநர், தமிழ்ப்பண்பாட்டு மையம்
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

**தே. தீபா**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்ப்பண்பாட்டு மையம்
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

**மலர்:** 3
**இதழ்:** 4
**மாதம்:** ஏப்ரல்
**வருடம்:** 2019
ISSN: 2454-3993

தமிழ் மொழியில் முத்தமிழ்களாகச் சிறந்து விளங்கக்கூடிய இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் ஆகியவற்றால் அமைக்கப்பட்ட காப்பியத்தின் தலைமை நிலையில் திகழக்கூடியது சிலப்பதிகாரம் ஆகும். இதில் இசைத்தமிழில் முக்கியக் கருவாக அமைவது இசைக்கருவிகளாகும். வஞ்சிக் காண்டத்தில் காணப்படக்கூடிய சிறப்புத் தன்மையை ஆய்ந்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

## இசைக்கருவிகள்

இசையானது நடனம், பாடல், நாடகம் ஆகிய அனைத்திற்கும் அடிப்படையான பொருண்மையாக உள்ளது. இசையற்ற நடனமானாலோ, பாடலானாலோ, நாடகமானாலோ எவையாக இருப்பினும், தலைமையற்ற நிறுவனத்திற்கு சமமானதாக அமைகின்றது. இச்சிறப்பிற்குரிய இசைகளானது நான்கு பொருட்களிலிருந்து உருவாகின்றது. அவை 1. தோற்கருவி 2. துளைக்கருவி 3. நரம்புக்கருவி 4. கஞ்சக்கருவி என்பனவாம். இப்பிரிவு வகையினில் வஞ்சிக்காண்டத்தில் காணலாகும் இசைக்கருவிகள் பகுக்கப்பட்டு எடுத்துரைக்கப்படுகிறது.

## தோற்கருவிகள்

இசைக்கு உயிர் நாடியாகத் திகழக்கூடியதாகத் தோற்கருவி அமைகின்றது. இது மரத்தால் செய்யப்பட்டுத் தோலைக்கொண்டு போர்த்தப்பட்டுச் செய்யப்படுகின்றது. முன்னோர் காலத்தில் செய்தியினை அறிவிப்பதற்குத் தோற்கருவிகளைப் பயன்படுத்தியுள்ளனர். போர்ப்பறைகள், இறைவழிபாட்டுக் கருவியாகவும், அரசானைகளைத் தெரிவிப்பதற்காகவும், இசைநிகழ்வுகளுக்கும் இசைக்கருவிகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

‘பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திரலையம், மொந்தை, முரசு, கண்விடுதூம்பு, நிசாளம்,

துடுமை, சிறுபறை, அடக்கம், தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பறை, துடி, பெரும்பறை, உறுமி, கஞ்சரம், கடம், கிணை, தவில், பம்பை, பறை, மிருதங்கம் போன்ற தோற்கருவிகளில் பல இன்றளவும் பயன்பாட்டில் உள்ளன.

இவற்றில் மத்தளம், சல்லிகை, இடக்கை, கரடிகை, படகம், குடமுழா போன்றன இசைப்பாட்டிற்குரிய பக்கவாத்தியங்களாக அமைகின்றன. இவை ‘அகமுழவு’ என்றழைக்கப்படுகிறது.

தண்ணுமை, தக்கை, தகுணிச்சம், என்பன மத்திமமான கருவிகளாம். இவை ‘அகப்புறமுழவு’ எனவும், கணப்பறை முதலியன அதமக்கருவிகளானதால் ‘புறமுழவு’ எனவும் அழைக்கப்படுகின்றன.

இவ்விசைக் கருவிகளானவை கருங்காலி, வேம்பு, செங்காலி, பலா, உலோகம், மண் போன்றவற்றாலும், ஆவின் தோல், ஆட்டுத் தோல், காளையின் தோல் ஆகியவற்றாலும் செய்யப்படுகின்றன. தோள்களை இறுக வளைத்துக்கட்டுதலுக்கு வார்களைப் பயன்படுத்துகின்றனர். (சண்முகசெல்வகணபதி, தமிழகக் கலைகள், ப.51)

**மத்தளம்**

மத்தளம் என்பது வஞ்சிக்காண்டத்தில் ஓரிடத்தில் காணப்படுகிறது. மத்து என்பது ஓசைப்பெயர். தளமென்பது இசையிடனாகிய கருவிகளுக்கெல்லாம் தளமாக இருப்பது, இதனால் மத்தளமெனும் பெயர் பெற்றுத் திகழ்கிறது. இசைப்பாட்டிற்கு மட்டுமல்லாது கூத்து, நடனம் முதலிய ஆடல்களுக்கும் மத்தளமானது இன்றியமையாததாக அமைகிறது. இது இசைக்கருவிகளில் முதன்மையானதாக அமைகிறது. இசை “அமைப்பில் மரத்தால் (கொட்டு) நடுவுயர்ந்து அளவுகள் தவறாது இடதுபக்க, வலது பக்க அமைப்புகள் அமைந்தாலும், வாய்களில் மடிதோல் உட்காரத் தோல் போன்ற பல்வகைத் தோல் அமைப்புகளினாலும் பிணைக்கப்படுவதாலும் தனித்த கொட்டுக்கருவியாக வளர்ந்துள்ளது என்பது பெறப்படுகிறது” (சண்முக. செல்வ கணபதி, தமிழகக் கலைகள், ப.56). இவற்றால் மத்தளமானது செய்யப்படுவது குறித்தும் அதன் பயன் நிலை குறித்தும், மக்களிடத்து செல்வாக்கு பெற்ற தன்மை குறித்தும் அறியப்படுகிறது.

இச்சிறப்பு மிக்க மார்ச்சனையுடைய மத்தளத்தைப் பணிப்பெண்கள் இசைத்தவர்களாய் திகழும் நிலையை வேண்மாள் நிலா முற்றத்தில் நிலவொளியைக் கண்டு மகிழ வந்த நிலையில் காணமுடிகிறது (சிலம்பு.28:55-56, ப.501) இதனால் அரசியை காணச்செல்லும் நிலையில் பணிப்பெண்கள் பாடலிசைத்து இசைஅமைத்து திகழ்கின்றமையைக் காணமுடிகின்றது.

**முழவு**

முழவென்பது வஞ்சிக்காண்டத்தில் ஓரிடத்தில் காணப்படுகிறது. முழக்கப்படுகின்ற அனைத்துக் கருவிகளுக்கும் ‘முழவு’ என்பது பொதுச் சொல்லாக அமைகின்றது. முழவென்பது முழக்கப்படுவதாம். இதனால் கொட்டுக் கருவிகளுக்கும் முழவென்பது பொதுச் சொல்லாக அமைகின்றது. “பலாப்பழம்” போன்று நீண்டு உருண்ட தனித்த கொட்டுக் கருவியைப் பண்டைய பாணர்கள் முழவு என்று உரைத்துள்ளமையை, “கலையுணக் கிழிந்த முழவு மருள் பெரும்பழம்” (புறநா.236:1) என்பதன் மூலம் காணமுடிகிறது. இம்முழவானது உட்புறம் குடைந்தும், மணலால் செய்யப்பட்டது,

**“தூம்பகச் சிறு முழா”** **(புறநா.103:1)**
**“மந்த முழவம் மழலை ததும்ப”** **(தேவா:1:98:3)**
**“மண்ணார் முழவு”** **(அகநா.346:14)**
**“மண்கணை முழவு”** **(பரி:22:36)**

இம்முழவானது ஒலித்தலைப் போன்று அருவியின் நீரொலியானது அமைந்திருந்தது என்பதை,

**"துஞ்சா முழவி னருவி யொலிக்கும்"** **(சிலம்பு.25:6 ப:437)**

என்னும் அடியால் அறியமுடிகின்றது.

**முரசு**

முரசானது ஐந்து இடங்களில் வஞ்சிக்காண்டத்தில் இடம் பெற்றமைகின்றது. அரசனின் சின்னங்களாக விளங்கும் மலை, ஆறு, நாடு, ஊர், யானை, குதிரை, மாலை, கொடி, முரசு, ஆணை ஆகியவற்றில் முரசானதும் ஒன்றாகத் திகழ்கிறது.

பெரிய அளவிலான தடித்த தோலினை மயிரைச் சீவாது போர்த்தப்பட்டிருக்கும் வாரானது நன்கு செப்பனிடப்பட்டிருக்கும். முரசு மற்றைய கருவிகளைவிடப் பெரியதாகையால் ஒலிக்கும் பகுதியானது அகன்ற உரல் போன்ற வட்ட வடிவமான வாயினை உடையது. வாரினால் நன்கு இழுத்துக்கட்டப்பட்ட இதன் கண்ணில் குறுந்தடியினால் இசைக்கும் பொழுது 'இழு' மென்னும் நுட்பம் பொருந்திய இனிய ஓசையானது ஒலிக்கும்.

முரசிற்குள் பறை, முழவு, பேரிகை ஆகிய தோற்கருவிகள் அடங்குகின்றன. இக்கருவியானது வன்மைக்கருவி, வீரக்கருவி, பண்ணமை முழவு என வகைப்படுத்தப்படுகின்றது (த.சி.மகேந்திரன், தமிழர் முழவியல், ப.149).

சேரன் செங்குட்டுவன் வடதிசை நோக்கிப் பயணம் செல்ல உள்ளதை வீதிதோறும் சென்று முரசறைந்து பறைசாற்றும்படியாக அழும்பில்வேள் உரைக்க, (சிலம்பு. 25:175-177, ப.451; 26:1-2; ப.453) காணமுடிகிறது. மேலும்,

**"உரவு மண் சுமந்த அரவுத்தலை பனிப்பப்**
**பெருந ரார்ப்பொடு முரசெ ழுந்தொலிப்ப"** **(சிலம்பு.26:34-35, ப.456)**

எனுமிடத்தில் போர் வீரர்களது வீர முழக்கத்தோடு முரசின் ஒலியும் இணைந்தொலித் தமையையும்,

**"வடித்தோல் கொடும்பறை வால்வளை நெடுவயிர்**
**இடிக்குரல் முரசம்"** **(சிலம்பு. 26:193-194, பக்.468-469)**

தோலாலான போர்ப்பறைகளோடு இடிமுழக்கத்தைப் போன்று முரசொலியும் இணைந்து எல்லாத் திக்குகளிலும் முழங்கின என்றுரைப்பதன் வாயிலாயும் முரசு குறித்த பதிவுகளையும். போர்ச் செய்தியை மக்களுக்கு அறிவிக்க முரசினைப் பயன்படுத்தியமையைக் காணமுடிகிறது.

**பறை**

பறையானது தொன்மையான கருவியாகும். தொல்காப்பியர் குறிப்பிடுகின்ற நிலத்திற்குரிய கருப்பொருட்களில் பறையும் ஒன்றாகத் திகழ்கிறது. இதுவும் பிற கருவிகளைப் போன்று தோலால் போர்த்தப்பட்ட கருவியாகும். வாரால் நன்கு வரிந்து இறுக்கிக் கட்டப்பட்டுள்ள இக்கருவியானது ஒரு முகமுடையதாகவம், இரட்டை முகமுடையதாகவும், பறையினை அடித்து ஒலியினை எழுப்புவர். இதிலிருந்து வரும் ஓசையினைக்கொண்டு "பேரோசைப் பறை" என்றழைக்கப்பட்டது.

இது போர்ப்பறை, வெருப்பறை, வெறியாட்டுப்பறை, பேரோசைப் பறை மற்றும் தவளையின் குரலையுடைய பறை "தட்டைப்பறை" எனவும் அழைக்கப்படுகிறது. பகைவர் நாட்டைக் கைப்பற்றி இருந்தால் போரிட்டு நாட்டை மீட்ட பின்னர் வெற்றிச் செய்தியை அறிவித்துக் கொண்டாடுதலுக்கு இசைக்கப்படும் பறையானது "வெற்றிப்பறை" என்ற வகைப்பாடுகளில் அமைகின்றது.

தொல்காப்பியர் கருப்பொருட்களில் ஒன்றாக பறையினை,

**குறிஞ்சி – தொண்டகம், முருகியல், துடி**
**பாலை – துடி**
**முல்லை – பம்பை, ஏறுகோட்பறை**
**மருதம் – கிணை**
**நெய்தல் – சாப்பறை**

என ஐவகை நிலத்திற்கென்று அமைந்திருப்பதன் மூலம் அற்றைக் காலந்தொட்டு, இற்றைக் காலத்தில் நாட்டுப்புறங்களில் இசைக்கலைஞர்களால் இசைக்கப்படுதலால் இதன் சிறப்புப் பாங்கினை அறிய இயலுகிறது.

இப்பறையானது வஞ்சிக் காண்டத்தில் மூவிடங்களில் இடம் பெற்றுள்ளது. காட்சிக் காதையில் வேடுவர்கள் மற்றும் குறத்தியர் இசை இசைத்து வரும்பொழுது, பல ஓசைகளோடு,

**"பறையிசை யருவிப் பயன்கெழு மோதையும்" (சிலம்பு.25:28, ப.439)**

ஒலித்தன எனவும், சேரன் செங்குட்டுவன் பகையரசர்களோடு போரிடும் பொழுது பல கருவிகளொயோடு போர்ப் பறையின் ஒலியும் இணைந்து எல்லாத் திக்குகளிலும் ஒலித்தன எனவும் (சிலம்பு.26:193, ப.468), சிவபெருமான் பறையினை அவுணர்களை அழிக்கும்பொருட்டு முழக்கி கொடுகொட்டி ஆடியமை (சிலம்பு.28:68, ப.502), இவற்றால் பறை குறித்த பதிவுகளையும், இசைக் கலைஞர்களான வேடுவர் குறித்தியர் இசைத்தல், போர் நிகழ்வை பறைசாற்றியது, பகைவர்களை அழித்தல் நிலையில் இசைத்தமை மூலமாக அறியமுடிகிறது.

**துளைக்கருவி**

துளைக்கருவிகளும் தொன்மையான இசைக்கருவிகளாகும். இவற்றை இயற்கை தந்த இணையற்ற கருவிகள் என்றும் அழைக்கலாம். "வண்டு துளைத்த மூங்கில் மரத்தின் வழியாக சென்று வரும் காற்றின் ஓசையினைக் கேட்டு அதன் அடிப்படையினில் இவ்விசைக் கருவிகளை உருவாக்கினர்" என சண்முக செல்வ கணபதி (தமிழகக் கலைகள், ப.52) உரைப்பதால் கருவி செய்யப்படும் முறை குறித்து அறியலாகிறது.

நாதசுரம், புல்லாங்குழல், கிளாரினெட், ஒத்து, ஆர்மோனியம், ஊதுகொம்பு, சங்கு, முகவீணை, மகுடி, தாரை, எக்காளம் முதலான கருவிகள் இவ்வகையைச் சார்ந்ததாக அமைகின்றன. மூங்கில் மரத்தோடு, உலோகத்தாலும் இக்கருவிகள் செய்யப்படுவதைக் காணமுடிகிறது.

**குழல்**

உருண்டை வடிவமான குழலின் மேல் துளையிடுவர். இதில் ஒன்பது துளைகள் இருக்கும். எல்லாத் துளைகளையும் திறந்து பிறகு ஒவ்வொன்றாக முறையே விரல்களினால் மூடி வாசித்து வரும்பொழுது ஏழு சுரங்களும் பிறக்கும். மூங்கிலினால் செய்யப்படுவதால் புல்லாங்குழல் எனும் பெயர் பெற்றமைகின்றது. இதற்கு வங்கியம் எனவும் வேறு பெயர் உள்ளது.

இது மூங்கிலோடு சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி மற்றும் வெண்கலத்தாலும் செய்யப்படுகிறது. இதில் மூங்கிலால் செய்யப்பட்ட குழலே அனைத்திலும் சிறந்ததாகத் திகழ்கிறது. இளமையும் மூப்புமில்லாமல் நடுவயதில் வளர்ந்துள்ள மூங்கில் மரத்தை வெட்டி நிழலிலே ஓராண்டு வைத்த பிறகு குழல் செய்யப்படுகிறது. குழலானது வஞ்சிக்காண்டத்தில் ஓரிடத்தில் இடம் பெற்றமைகிறது.

சிறப்பு மிக்க, குழலினை முல்லைப் பண்ணூதி சேரமன்னன் பகைவர்களை வென்று இமயத்திலிருந்து பசுக்கூட்டங்களை கொண்டுவரும் செய்தியைப் போற்றுவீர்களாக என மக்கள் பாடினமையால் (சிலம்பு. 27:241, ப.493) குழலானது முல்லை நிலத்திற்குரிய இசைக்கருவி என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது. அரசனது பெருமையைப் போற்றும்போது பறையோடு குழலினையும் இணைத்து ஒலித்துள்ளமையையும் அறியலாகிறது.

### சங்கு

சங்கு கடலிலிருந்து கிடைக்கும் இயற்கைக் கருவியாகும். இது பெரும்பாலான விழாக்காலங்கள், திருமணச் சடங்குகள், இறப்பு நிகழ்வு எனப் பல்வேறு நிகழ்வுகளுக்குப் பயன்பட்டு அமைகிறதைக் காணமுடிகிறது.

இச்சங்கு பற்றிய குறிப்பானது வஞ்சிக்காண்டத்தில் ஓரிடத்தில் இடம் பெறுகிறது. சேரமன்னன் பகை அரசர்களை வென்றுவரும் செய்தியினைப் போற்றி இசைக்கருவிகளை இசைக்கும்பொழுது,

**"……………………வால்வளை நெடுவயிர்"** **(சிலம்பு.26:193, ப.439)**

இணைந்து எல்லாத் திக்குகளிலும் இசைத்தன என்றுரைப்பதால், மன்னன் வெற்றிப் புகழினைப் போற்றி இசைத்து இன்புற சங்கினைப் பயன்படுத்தியுள்ளமையைக் காணமுடிகிறது.

### ஊது கொம்பு

ஊதுகொம்பு என்பது மேல் ஸ்தாயி ஒலியைக் கொடுக்கும் தன்மையுடைய காற்று வகையான இசைக்கருவியாகும். கி.பி.1500 ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது போர்கள் அல்லது வேட்டைக்கு சமிக்ஞை சாதனங்களாகப் பயன்படுத்தியமையையும் காண முடிகிறது. இது நீள் வளைய வடிவில் சுற்றப்பட்ட பித்தளைக் குழாயால் ஆனது. குழாயின் ஒரு முனையில் வாயால் ஊதுவதன் வாயிலாய் உள்ளேயுள்ள காற்றானது அதிர்ந்து ஒலியானது வெளிப்படுவதைக் காணமுடிகிறது. துவக்கக்கால ஊதுகுழல்கள் இராணுவம் மற்றும் மதநோக்கங்களுக்கான சமிக்ஞை கருவிகளாகப் பயன்படுத்துப்பட்டன.

ஊதுகொம்பானது ஒரு நீள் வட்ட வடிவத்தில் இரண்டு முறை வளைந்திருக்கும் பித்தளை குழாயால் கட்டப்பட்டுக் காணப்படும் இசைகலைஞர்கள் உதட்டுப் பிடிகளை மாற்றி இசைத்து சுருதிகளை மாற்றிக்கொள்ளலாம்.

இத்தகைய சிறப்புத்தன்மையில் விளங்கும் ஊதுகொம்பானது வஞ்சிக் காண்டத்தில் ஓரிடத்தில் மட்டும் இடம் பெறுகிறது. சேரமன்னனது வெற்றியினை நீண்டு விளங்கக்கூடிய ஊதுகொம்போடு இசைக்கருவிகளை இசைத்து அனைத்துத் திக்குகளும் அதிரும்படியாக (சிலம்பு. 26:193) இசைக்க என்றுரைப்பதன் வாயிலாய் மன்னன் வெற்றியைப் போற்றி இசைக்க ஊதுகொம்பினைப் பயன்படுத்தியுள்ளமையைக் காணமுடிகிறது.

### நரம்புக் கருவிகள்

நரம்புக் கருவிகளானவை மரத்தினால் செய்யப்பட்டு நரம்புகள் அல்லது கம்பிகளால் பூட்டப்பட்டுச் செய்யப்பட்டிருக்கும் தன்மையுடையது. இந்நரம்புக் கருவிகளை 'தந்தி வாந்தியம்' எனவும் அழைக்கப்படுவதைக் காணமுடிகிறது (சண்முக.செல்வகணபதி, தமிழகக் கலைகள், ப.53)

யாழ், வீணை, தம்பூரா, கோட்டு வாத்தியம், பிடில் போன்றவை இவ்வகைக் கருவிகளாகும். பி.சைதன்யா தேவா தாமெழுதிய இசைக்கருவிகள் எனும் நூலில், இக்கருவிகளை மூன்று வகைகளாகப் பிரித்துரைக்கின்றார். அவை:

1. கருவி அல்லது தாள உபகரணமாகப் பயன்படுபவை – தம்புரா
2. ஒரு தந்தி ஒரு சுரம் மட்டும் இசைக்கப் பயன்படுபவை – யாழ்
3. ஒரே தந்தியில் பல சுரங்கள் இசைக்கப்படுபவை – வீணை

**யாழ்**

யாழ் பழைமையான இசைக்கருவியாகும். பல நாடுகளில் துவக்க கால நிலையிலிருந்து போற்றி இசைக்கப்பட்டு வந்த கருவியாகும். வடஇந்தியாவிலே இக்கருவியானது வழக்கிழந்த பிறகும் தமிழ்நாட்டிலே நெடுங்காலமாகப் போற்றப்பட்டு வந்ததைச் சங்க நூல்களை வாசிக்கும்பொழுது அறியமுடிகிறது. இது நரம்பமைப்புக்களைக் கொண்டு பிரிக்கப்படுகிறது. அவை:

21 நரம்புகள் - பேரியாழ்
17 நரம்புகள் - மகரயாழ்
16 நரம்புகள் - சகோடயாழ்
7 நரம்புகள் - செங்கோட்டுயாழ் என்பனவாம்.

‘இசை இலக்கணத்தைத் தொல்காப்பியர் ‘நரம்பின் மறை’ என அழைத்தமையை’ சண்முக செல்வகணபதி, (தமிழக கலைகள் ப.53) உரைத்துள்ளார்

சிறப்பு மிக்க யாழானது நான்கு இடங்களில் வஞ்சிக் காண்டத்தில் இடம்பெறுகிறது. குயிலின் ஓசையும், வண்டுகளின் யாழிசை ஒத்த ஓசையும் விளங்கும் இளவேனிற்காலம் என்று உரைக்குமிடத்து இளவேனிற் கால நிலைத் (சிலம்பு. 26:112, ப.462) தன்மையை உணரும்தன்மையிலும், வண்டுகளின் ஓசையை யாழிசையோடு ஒப்புமைப்படுத்தி உரைக்குமிடத்து யாழ் குறித்த பதிவினைக் காணமுடிகிறது. பெண்கள் இளைஞர்கள் வரவேற்குமிடத்து,

**“வணர் கோட்டுச் சீறியாழ் வாங்குபு தழீஇப்**
**புணர்புரி நரம்பில் பொருள்பட பந்தர்க்**
**குரல் குரலாக வருமுறைப் பாலையின்**
**துத்தம் குரலாத் தொன்முறை இயற்கையின்**
**அம்தீம் குறிஞ்சி யகவன் மகளிரின்**
**மைந்தர்க் கோங்கிய வருவிருந் தயர்ந்து”** **(சிலம்பு.28:31-36, ப.499)**

யாழை எடுத்து இசை இசைத்ததன் வாயிலாய், யாழிலுள்ள இசைநரம்புகள் நன்கு இழுத்துக் கட்டப்பட்டாலே இசையினை இசைக்க முடியுமென்பதைக் அறிய முடிகிறது.

**“……………………..வணர்கோட்டு யாழும்”** **(சிலம்பு.28:55, ப.501)**
**“பாடலும் எழாலும் பண்ணும் பாணியும்”** **(சிலம்பு.நூற்கட்டு.10, ப.558)**

எனும் தன்மையிலும் அரசியைக் காண வந்த பணிப் பெண்கள், யாழோடு பல வாத்தியக் கருவிகளை இசைத்தமையையும், சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் இசைப்பாடலோடு யாழிசையம் தாளமும் சேர்த்து அமைக்கப்பட்டன என்றுரைப்பதையும் காணமுடிகிறது.

**இசைக்கலைஞர்கள்**

இசைக்கருவிகளை இசைப்போர் இசைக்கலைஞர்கள் என்றழைக்கப்பட்டனர். பாணர், விறலியர், வேடுவர் என்ற பல பெயர்களில் இவர்கள் அழைக்கப்படுகின்றனர். இசைக்கலைஞர்கள் இறைவனைப் போற்றி, தங்கள் வாழ்வை நடத்தி வந்துள்ளமையை இலக்கியங்களில் காணமுடிகிறது.

சிறப்பு மிக்க இசைக்கலைஞர்கள் குறித்து இரு இடங்களில் வஞ்சிக் காண்டத்தில் காணமுடிகிறது. கால்கோள் காதையில் சஞ்சயன் என்பவன் சேர மன்னனிடம், மன்னனுக்காக இமயத்திலிருந்து கல் கொண்டு வருவதாக எடுத்துரைத்து, நாடக மகளிரோடு, வாத்தியக் கருவிகளை வாசிப்பவர்களை (சிலம்பு. 26:141-143, ப.464) அறிமுகப்படுத்துமிடத்தும், கனகர், விசயர் ஆகிய மன்னர்கள் தமிழக மூவேந்தருக்கு அஞ்சி மாறுவேடம் பூண்டதில் வாத்தியம் வாசிக்கும் கலைஞர் (சிலம்பு. 26:28:456) போன்றும் வேடமிட்ட தன்மையில் இசைக் கருவிகளை இயக்கும் இசைக்கலைஞர்கள் குறித்த பதிவினைக் காணமுடிகிறது.

**முடிவுரை**

இசைக்கருவிகளானவை 1.தோற்கருவி, 2.துளைக்கருவி, 3.நரம்புக்கருவி, 4.கஞ்சக்கருவி ஆகிய நான்கு வகையில் அமையும் பாங்கில், முழவு, முரசு, பறை, சங்கு, ஊதுகொம்பு, குழல் ஆகிய துளைக்கருவிகள் குறித்தும், யாழ் எனும் நரம்புக்கருவி குறித்த பதிவினையும், அவை உரைக்கப்படும் தன்மை குறித்தும், முரசினைப் பறை என (25:177, 194; 26:1) ஆகிய மூவிடங்களிலும், மத்தளமென்பதை முழவு (28:5) எனவும், சங்கினை வால்வளை (26:193) எனவும், ஊதுகொம்பினை நெடுவயிர் (26:193) எனவும், குழலினை குழவு (27:241) எனவும், நூற் கட்டுரையில் யாழினை எழால் (10) எனவும் வேறு பெயர் கொண்டு உரைப்பதையும் காணமுடிகிறது. இசைக்கருவிகளானவைப் பெரும்பான்மையாக மக்களிடத்து போற்றி பறைசாற்றும்படியாகப் பயன்படுத்தப்பட்டள்ளமையையும், இசைக்கலைஞர்கள் குறித்த பதிவினையும் காணமுடிகிறது.